# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 17 புதன்கிழமை 01.01.2025 கதிர் 83







## மறைந்த மன்மோகன் சிங்குக்கு அஞ்சலி செலுத்தினார் சிறீதரன்



மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் அஞ்சலி செலுத்தினார்.

அத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த அஞ்சலிக் குறிப்புப் பதிவேட்டிலும் ஈழத்தமிழர்கள் சார்பிலான இரங்கல்களை அவர் பதிவு செய்தார்.

**'மாலைக்கதிர்' வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!**




# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உடனடியாக நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதியிடம் மனோ எம்.பி. வலியுறுத்து

**நாட்டு மக்கள் வழங்கியுள்ள ஆணையைப் பயன்படுத்தி தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் என அனைத்து பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளது. அனைத்து இன மக்களின் ஆசியுடன் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு மக்கள் வழங்கியுள்ள ஆணையை பயன்படுத்தி பொருளாதாரப் பிரச்சினை மற்றும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் என்னை நிராகரிக்கவில்லை. நாடாளுமன்றம் தெரிவாவதற்குப் பெற வேண்டிய வாக்குகளைப்

7➤

## புலிகளால் மஹிந்தவுக்கு ஆபத்து எதுவும் இல்லை

### காரணத்தை விளக்குகின்றார் பொன்சேகா



இறுதிப் போரின்போது பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பித்துச் செல்வதற்காகவே 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தத்தை வழங்கினார் என்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ள

7➤

## மஹிந்தவை அரசியல் ரீதியில் முடக்குவதற்கு அநுர அரசு சதி

### மொட்டுவின் செயலர் சாகர குற்றச்சாட்டு



"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அரசியலில் இருந்து ஓய்வுபெற வைப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது. ஏனெனில் மஹிந்தவுக்கு ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர்." என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

7➤

## குற்றத் தடுப்புப் பிரிவால் நாமல் குமார இன்று கைது



சமூகச் செயற்பாட்டாளர் நாமல் குமார கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் வழங்க வந்த வேளை அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார்

7➤

## ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைப்பு இந்த மாதத்தில் இருந்து ஆரம்பம்

### தலைமைப் பதவியில் மாற்றம் இல்லை

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் மறுசீரமைப்பு நடவடிக்கை ஜனவரியில் இருந்து ஆரம்பமாகும் எனவும், கட்சித் தலைமைப் பதவியில் மாற்றம் வராது எனவும் நாடாளுமன்ற



உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய அரசியல் வேலைத்திட்டம் ஜனவரியில் இருந்து முன்னெடுக்கப்படும்.

7➤

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் அநுர அரசு பயப்படத் தேவையில்லை

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் அநுர அரசு பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது என்று ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று புதன்கிழமை காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“புலம்பெயர்ந்துள்ள எம் உறவுகள், எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதி அநுர கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

எனவே, இந்த புதிய ஆண்டில் எமது கிராம மக்கள் அனைத்து விதமான வசதிகளும் உள்ளன என்று கூறக்கூடிய வகையில் இந்த அரசு செயற்பட வேண்டும்.

அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறோம். இந்த வருடத்தில் பின்தங்கிய கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி பெற வேண்டும். அதற்கான செயற்பாடுகளை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும். பிரிந்து செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நாங்கள் ஒற்றுமையாகச் செயற்படவில்லை என்றால் நம் மண்ணையும் மக்களையும் உதாசீனம் செய்யும் கட்சிகளாகவே நாம் இருப்போம்.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் தேசிய கட்சிகள் இல்லாது போகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படும்.

எதிர்வருகின்ற தேர்தல்களில் நாங்கள் ஒற்றுமையாகச் செயற்படவில்லை என்றால் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள அநுரவின் அலை வடக்கு, கிழக்கிலும் ஏற்படும். இதனால் பாதிப்புகள் எமக்கு ஏற்படும் என்பது உண்மை.

மக்களின் எதிர்பார்ப்பு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயற்படுங்கள் என்பதே. அந்த ஒற்றுமை இல்லை என்றால் நாங்கள் காணாமல்போய் விடுவோம்.” - என்றார்.

# தமிழரசுக் கட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே சுமந்திரனின் நிலைப்பாடு



தமிழரசு கட்சி சிதைந்ததாலும், அழிந்தாலும் பரவாயில்லை, கட்சி தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே சுமந்திரனின் நிலைப்பாடு என அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தனது அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வவுனியாவில் இடம் பெற்ற இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூடி சீ.வி.சிவஞானம் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதுமட்டுமின்றி தமிழரசு கட்சியில், சுமந்திரன் தரப்போடு முரண்பட்ட பலரும் நீக்கப்பட்டுள்ளனர். அதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது ஒரு மோசமான செயற்பாடு, மத்திய குழுவை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து தனக்கு சார்பான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளில் சுமந்திரன் மும்முரமாக இருந்துள்ளார்.

ஏற்கனவே மாவை சேனாதிராஜாவை மாற்ற வேண்டும் என்றால் அல்லது அவர் பதவி விலக வேண்டும் என்றால் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட தலைவராக சிறீதரன் இருக்கின்றார். அவரை தலைவராக தெரிவு செய்வதுதான் ஒரு அறநெறிக்கு உட்பட்டதாகும், அதை விடுத்து அதைப் பற்றி எதுவுமே பேசாமல் இன்றைக்கு சி.வி.கே. சிவஞானம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

இது தமிழரசு கட்சியில் சுமந்திரன் பிரிவினருக்கு எதிராக இருக்கின்றவர்களை அகற்றி சிறீதரனை தனிமைப்படுத்துகின்ற ஒரு நடவடிக்கை உள்வாரியாக இடம் பெறுகின்றது என்றே நான் நினைக்கின்றேன். இன்னும் கொஞ்சக்காலத்தில் சிறீதரன் தனிமைப்பட்டுப் போக சிறீதரனுக்கு எதிராக ஒரு ஒழுக்காற்று தீர்மானத்தை நிறைவேற்றி அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கூட பறிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

குறைந்தது ஆறு மாதத்திற்குள் சுமந்திரன் சிறீதரனை கட்சியிலிருந்து நீக்கி அல்லது தேசிய பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சத்தியலிங்கத்தை பதவியிலிருந்து விலக சொல்லி தான் அதற்கூடாக நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன்.

இன்னொரு பக்கமாக சுமந்திரன் ஊடக பேச்சாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார். ஏற்கனவே சிறினேசன் ஊடக பேச்சாளராக இருக்கின்றார். அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றார்.

தற்போது புதிதாக கட்சியின் பேச்சாளராக சுமந்திரன் இருப்பார் என்றும், நாடாளுமன்றத்தின் ஊடக பேச்சாளராக சிறிநேசன் இருப்பாரென்றும் கூறப்படுகிறது. ஓர் கட்சிக்கு ஏன் இரண்டு ஊடக பேச்சாளர்கள், ஒரு கட்சிக்கு ஓர் ஊடக பேச்சாளர் போதுமானதே. சுமந்திரனுக்கு பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நான் நினைக்கின்றேன்.

தமிழரசு கட்சியின் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் மாவை சேனாதிராஜா தான் என சாணக்கியன் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார். மாவை சேனாதிராஜா மீது விமர்சனங்கள் இருக்கின்றன என்பது உண்மை, ஆனால் இந்த போக்குகள் எல்லாவற்றிற்கும் மூல காரணம் சுமந்திரன் தான் என்பது உண்மையாகும்.

இதிலே தமிழரசு கட்சி என்பது ஒரு பாரம்பரிய கட்சி, அதற்கு ஒரு வரலாறு இருக்கிறது, அதற்கு வடக்கு கிழக்கு கட்டமைப்பு இருக்கிறது. அது பலவீனப்பட்டு செல்வது தமிழ் அரசியலை பலவீனப்படுத்துவது தமிழ் அரசியலை பலவீனப்படுத்தும் ஒரு செயலாகும். ஆகவே தமிழரசு கட்சியை பாதுகாக்கின்ற நடவடிக்கையை கடசிக்காரர்கள் செய்வார்கள் என்று நான் நினைக்க வில்லை. ஆகவே வெளியிலிருந்து மக்கள் ஒரு பலமான அழுத்தத்தை கொடுப்பதன் ஊடகவே இதனை முன்னேற்ற முடியுமென நான் கருதுகின்றேன். அதிலிருந்து நாம் தவறுவோமாகவிருந்தால் நாம் ஒரு குறுகிய காலத்திலேயே இலங்கை தமிழரசு கட்சி வடக்கிலே இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகக்கூடி ஒரு சூழல் வரலாம் என்பதே எனது நிலைப்பாடு.

இந்தப் போக்கை தமிழ் மக்கள் அனுமதிக்கப்போகிறார்களா என்பதுதான் எனது கேள்வி. இதில் தெளிவாகத் தெரிகின்ற ஒரு விடயம் இது ஒரு கொள்கைப் பிரச்சினை. தமிழரசு கட்சியும் தமிழ் தேசிய அரசியலும் இதுவரை பின்பற்றிய அரசியலை கைவிட்டு இன் னோர் அரசியலை கொண்டு செல்வதற்க்காக குறிப்பாக இறைமை அரசியலை கைவிட்டு ஒரு சிறுபான்மை இனம் என்ற அடிப்படையில் ஓர் அரசியலை கொண்டு செல்வதற்கும், இணக்க அரசியலைக் கொண்டு செல்வதற்காகவும் சுமந்திரன் இந்த வேலையை செய்கிறார்.

இந்த பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் ஏன்பதே எனது நிலைப்பாடாகும்” என தெரிவித்துள்ளார்.

# தமிழரசை முடக்கச் சூழ்ச்சி! மாவை கடும் குற்றச்சாட்டு

*கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்குவதற்குத் திரை மறைவில் சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்களே எனது தலைவர் பதவியைப் பிடுங்குவதில் குறியாக இருந்தார்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் கட்சியின் தற்போதைய அரசியல் குழுத் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.*

*இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலைமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.*

*அவர் மேலும் கூறுகையில்,*

*“குறுக்கு வழியில் தமிழரசுக் கட்சிக்குள் நுழைந்தவர்கள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அவர்களின் சுயநல நடவடிக்கைகளால் தான் எமது கட்சி பலவீனமானது. போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்க வேண்டும் என்று தென்னிலங்கை விரும்பியது. ஆனால், நானும் முன்னாள் தலைவர் சம்பந்தனும் தமிழரசுக் கட்சியைப் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பாதுகாத்தோம். இதெல்லாம் எமது கட்சியைத் தற்போது முடக்க முயலும் சூழ்ச்சிக்காரர்களுக்கு - மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு நன்கு தெரியும். தமிழரசுக் கட்சிக்குள் வந்து அரசியல் முகவரி தேடிய இந்தச் சூழ்ச்சிக்காரர்கள், கட்சியை முடக்க முயல்வது அசிங்கமானது.*

*அவர்கள் நன்றி மறந்தவர்கள். அவர்களின் எண்ணம் நிறைவேற நாம் ஒருபோதும் இடமளியோம் என குறிப்பிட்டுள்ளார்.*

# எரிபொருட்களின் விலையில் மாற்றம்

கொழும்பு, ஜன. 01

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் படி இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, மண்ணெண்ணெய் 05 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. இதற்கமைய அதன் புதிய விலை 183 ரூபாவாகும்.

இதேவேளை, பெற்றோல் மற்றும் டீசல் விலைகளில் எவ்விதமான மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதேவேளை, லங்கா ஐஓசி மற்றும் சினோபெக் ஆகிய நிறுவனங்களும் தமது எரிபொருளின் விலைகளை மாற்றமின்றி தொடர தீர்மானித்துள்ளன.

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு

கொழும்பு, ஜன. 01

இலங்கையின் வரலாற்றில் 2024ஆம் ஆண்டில் அதிகளவான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகப் புறப்பட்டவர்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் 2022 இல் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு வேலைவாய்ப்புப் புறப்பாடுகள் பதிவாகியிருந்ததாகவும், கடந்த 2019 முதல் 2024 வரையான ஆறு வருடங்களில் மொத்தம் 1.3 மில்லியன் பேர் வெளி நாட்டு வேலைகளுக்காக வெளியே றியுள்ளதாக தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில், மொத்தம் 185,162 ஆண்களும் 127,674 பெண்களும் வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக எண்ணிக்கையிலான இலங்கைத் தொழிலாளர்கள் குவைத்துக்கு (77,546) சென்றுள்ளதுடன், 51,550 பேர் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு சென்றுள்ளனர்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், தென் கொரியா (7098), இஸ்ரேல் (9665), ஜப்பான் (8665) ஆகிய நாடுகளுக்கு அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளியேறியுள்ளனர்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மூலம் ஈட்டப்பட்ட அந்நியச் செலாவணியும் 2024 இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியுள்ளது, நவம்பர் மாத இறுதியில் 6462 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நிய செலாவணி பதிவாகியுள்ளது.

# "க்ளீன் ஸ்ரீலங்கா" தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 01

அரச துறை மற்றும் தனியார் துறையினரால் முன்னெடுக்கப்படும் "க்ளீன் ஸ்ரீலங்கா" (தூய்மையான இலங்கை) வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையில் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் தொடக்கிவைக்கப்பட்டது.

பொது நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு நிகராக ஒரே நேரத்தில் தமது பணியிடங்களில் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

# திடீரென மயங்கிய குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 01

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஊரெழு கிழக்கு பகுதியில் திடீரென மயங்கிய இளங்குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தை சேர்ந்த கிருபரஞ்சன் (வயது-38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை தனியார் கல்வியில் நிலையத்திற்கு மகளை ஏற்றுவதற்காக மோட்டார் சைக்கிள் எடுக்கச் சென்றவர் திடீரென ஓடி வந்து மயங்கி விழுந்துள்ளார்.

இதனை அடுத்து உடனடியாக யாழ். போதனா வைத்தியாசா லைக்கு கொண்டு சென்ற நிலை அங்கு உயிரிழந்துள்ளார். இம் மரணம் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை (31) யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது




கொழும்பு, ஜன. 01

வெளிநாடு செல்ல முயற்சித்த தமிழர் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

39 மற்றும் 40 வயதுடைய இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போலியான இலங்கை கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி நேபாளத்தின் காத்மாண்டு செல்ல முயற்சித்த வேளையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேபாளத்தின் காத்மாண்டுக்கு புறப்படவிருந்த இந்தியன் ஏர்லைன்ஸ் விமானமான ஏஐ-282 இல் செல்வதற்காக அவர்கள் விமான நிலையம் சென்றுள்ளனர்.

எனினும் அவர்களின் கடவுச்சீட்டில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாக விசாரணை மேற்கொண்ட போது அது போலியானது என அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வுப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# மிதி வெடி

## இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

எல்வாரும் எப்பிடி இருக்கிறியள்? வருசம் எல்லாம் எப்பிடி? வழக்கம் போல ஒவ்வொரு வருசமும் கழிஞ்சு, புது வருசம் வரேக்க உறுதிமொழி எல்லாம் எடுக்கிறதும், எதுவுமே கைகூடாமல் அந்த வருசம் கழிஞ்சு போறதும் வழமை தானே?

இந்த வருசமாவது பிரியோசனமா ஏதாவது நடக்க வேணும் எண்டு கடவுளைக் கும்பிட்டுக் கொண்டு வருசத்தைத் தொடங்குங்கோ... நடக்கிறதெல்லாம் நன்மைக்குத் தான் எண்டு நம்புவம்....

வருசம் மாறுது ஆனால் வேற ஒண்டும் மாறினதா இல்ல.. அதைத் தான் சொல்லுறவை "ஆட்சி மாறினாலும், காட்சி மாறவில்லை" எண்டு.. உண்மை தான் பாருங்கோ... எல்லா இடமும் ஆட்சி மாறினது தான்.. ஆனா காட்சி மாறேல்ல...

மாநகரத்தில ஆணையிடுறவர் மாறிப் போனவரெல்லே... முந்தி இருந்தவர் ஆமானதா ஒண்டும் செய்யேல்ல எண்டு நான் தலையால அடிச்சுக் கொண்டனான் எல்லோ.... வந்தவர் ஏதோ வெட்டிக் கிழிப்பார் எண்ட எதிர்பார்ப்புத்தான் எல்லாம்... ஆனா "தெரியாத பேயை விடத் தெரிஞ்ச பிசாசு மேல்" எண்ட கணக்கா இப்ப இருக்குது பாருங்கோ.....

ஆட்சி மாறி.. அதிகாரக்கதிரைக்கு வந்தவர் வந்தவுடன, பழைய ஆளிண்ட சாயல் வீசின எல்லாரையும் தூக்கிக் கடாசினவர் தானே? நானும் ஏதோ நல்லது நடக்கப்போகுது எண்டு அநியாயத்துக்கு நம்பி, வீண் போயிற்றன் பாருங்கோ....

ஆர் அதிகாரத்துக்கு வந்தாலும், அவையளையும் மடக்கித் தங்கட வேலையைப் "பக்கா" வாக் டு போற ஆக்களுக்கு ஒரு ஆணையாளர் இல்ல, எத்தின பேர் மாறி வந்தாலும் தண்ணிக்குள்ளால விளக்கைக் கொண்டு போகக் கூடிய ஆக்கள் பாருங்கோ....

வரி வசூலிக்கிறதில அவர் "மன்னன்". "உயிர்நாடி" எண்டு பெயர் வேற... மாநகரத்துக்குள்ள இருக்கிற "சைக்கிள் பார்க்" குத்தகையில இருந்து சந்தைக் குத்தகை வரை... தன்ர ஆக்களைப் பினாமியாப் போட்டு "பிஸினஸ்" நடத்திறதில வலு கில்லாடி பாருங்கோ....

ஆணையிடுற கதிரைக்கு ஆர் வந்தாலும், படி அளந்த பெருமாள் கணக்காப் போய்ச் சேர வேண்டியதைக் கணக்காக் குடுத்துட்டு, அரசாங்கச் சம்பளம் எடுக்கிற நேரத்தில, தன்ர வேலையோட சம்பந்தப்பட்டதாயே ஆரேழு வாரமும் பாத்துப் போடுவார்.

கொட்டடியா இருந்தலென்ன... கல்வியங்காடா இருந்தா என்ன மீன் கடையில இருந்து, இறைச்சிக் கடை வரை "ஐயா"வுக்கு அமோக கவனிப்பு... சந்தையளில இருந்து, நகரக் கடையள் வரை சைக்கிள் பாதுகாப்புக் குத்தகையும் அவற்ர பினாமியளிட்டத் தான் இருக்குதாம்...

போன கிழமை எனக்கொரு சம்பவம் நடந்துச்சு பாருங்கோ.... யாழ். நகரத்தில மின்சார நிலைய வீதியில நான் "மோட்டர் சைச்கிள" நிப்பாட்டிப் போட்டு, உள்ளுக்குள்ள ஒரு கடைக்குப் போய்வர வேண்டி இருந்தது.

வழக்கமாப் "பார்க்" பண்ணுற மாதிரி "மோட்டர் சைச்கிள" நிப்பாட்டிப் போட்டு, உள்ள போயிட்டு வந்து சைக்கிளில திறப்பைப் போட்டு, "ஸ்ரார்ட்" பண்ண வெளிக்கிட ஒருத்தர் ஓடி வந்தார்..

வந்ததும், வராததுமா.. கேட்டுக் கேள்வி இல்லாமல் என்ர "மோட்டர் சைச்கிள்" திறப்பைப் புடுங்கி எடுத்துப் போட்டார். கடவுள் சத்தியமா நான் பயந்து போயிற்றன். "முப்பது ரூபா தாங்கோ... பாக்கிங் காசு" நான் கேட்டன் "ஏன் தம்பி? எதுக்கு இப்ப என்ர திறப்பைப் புடுங்கினீர்?"

"காசைத் தாங்கோ சொல்லுறன்"

எப்பிடி இருக்குது நியாயம் பாத்தியளே? என்ர வாகனத்தில என்னைக் கேளாமல் கை வைச்சுத் திறப்பைப் புடுங்கினதுமில்லாமல், திருப்பித் தாறதுக்குக் காசு குடுக்க வேணுமாம்...

நான் விடுறதாயில்லை... கொஞ்சம் உரக்கப் பறக்கச் சத்தம் போடத் தொடங்க சனம் கூடி விட்டுது...

வந்த சனத்துக்கும் ஒரே சந்தேகம்.. பாக்கிங் எண்டு கேட்டா காசைக் குடுக்கப் போறம்... அதுக்கு ஏன் திறப்பைப் புடுங்குவான்...

ஆக்கள் கூடின உடன அவருக்கும் ஒண்டும் செய்யேலாமல் போச்சு...

திறப்பைத் தந்தபடி "முப்பது ரூபா தாங்கோ... பாக்கிங் காசு" திரும்பத் திரும்ப உடைஞ்ச ரெக்கோடர் கணக்கா கேட்டதையே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டு நிண்டார்...

நான் கேட்டன் "ஏன் தம்பி?"

.. பாக்கிங் காசு.. "மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக் கட்டணம்..."

"ஓ.. அப்பிடியா... அப்பிடியெண்டா... நான் இதில வாகனத்தை நிப்பாட்டின நேரம் நிண்டு நீங்கள் "ரிக்கற்" தந்திருக்கவெல்லோ வேணும்... அதைவிட என்ர "சைக்கிள" இவ்வளவு நேரமாப் பாத்துக் கொண்டிருக்கவெல்லோ வேணும்? எண்டு கேட்டன்....

"ஐயா... உங்களோட கதைக்க எனக்கு நேரமில்ல.... காசு தராமல் நீங்கள் இண்டைக்கு "சைக்கிள்" எடுத்திருங்கோ பாப்பம்... உங்கட சைக்கிளப் பாதுகாக்கிறது எங்கட வேலை இல்லை.... இது எங்களுக்குக் கட்ட வேண்டிய நில வாடகை....

எப்பிடியிருக்குது பஞ்சாயத்து பாத்தியளோ....? "சைக்கிள் பாக்கிங்" கட்டணம் வாங்கிறவை "சைக்கிளு"க்குத் தாங்கள் பொறுப்பில்லையாம்....

நானும் விடேல்ல... சரி தம்பி... உங்களுக்கு நிலவாடகை எண்டா நீங்கள் ஆர்? ஏன் உங்களுக்கு நாங்கள் வாடகை தர வேணும் எண்டா... தாங்கள் "முனிசிப்பால்டி"யாம்... எங்க உங்கட "ஐசி"ஐக் காட்டுங்கோ எண்ட.. கொஞ்ச நேரம் முழிச்சுப் போட்டு, ஆரையோ "போனில" கூப்பிட்டார்... நானும் ஒரு முடிவு கட்டாமல் போறேல்ல எண்டு நிண்டன்...

அதுக்குள்ள... அங்காலப் பக்கம் "பார்க்" பண்ணிட்டுப் போன பொம்பிளப் பிள்ளை ஒண்டுண்ட "வெகோ பைக் சீற்"றைக் கழட்டி உள்ளுக்குள்ள வைச்சிருந்த எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு போட்டாங்களாம் எண்டு ஒரே அமளி...

மெல்லமாப் போய் அங்க பாத்தா... இதே ஆள் தான் அந்தப் பிள்ளையையும் வெருட்டி அடிச்சு முப்பது ரூபா பறிச்சிருக்கிறார். காசைக் குடுத்துப் போட்டு, வாங்கிக் கொண்டந்த வேற சாமானை வைக்கிறதுக்கு "சீற்"றைத் திறக்கேக்க தான் அந்தப் பிள்ளைக்கு "சைக்கிளு"க்குள்ள இருந்த அவ்வளவும் களவு போனது தெரியவந்திருக்கு...

"மோட்டார் சைக்கிள்" பாதுகாப்பு எண்டு ரிக்கெற் வேற குடுத்திருக்கிறார்... பாதுகாப்பு எண்டதுக்கு அர்த்தம் என்ன எண்டு கேட்டா அதுக்கும் அவர் சொல்லுற விளக்கம்... வாங்கிற காசு நில வாடகையாம்....

அந்தப் பிராதியில பொழுது போனதே தெரியாமல் இருக்க... என்னட்ட காசு கேட்ட தம்பி "கோல்" பண்ணிக் கூப்பிட்ட "சேர்" வந்து சேர்ந்தார்.... "ஆர் அது காசு தர மாட்ட எண்டது"... எண்டு பெரிசாக் கத்திக் கொண்டு வந்தவருக்கு என்னைக் கண்டதும் மண்டைக்குள்ளால போயிருக்க வேணும்....

"ஐயா... நீங்கள்....... பேப்பரில எல்லோ வேலை செய்யுறியள் ..." எண்டார். பிறகு அந்த "ரிக்கெற்" தம்பியை அங்கால கூட்டிக்கொண்டு போய் மெல்லமா ஏதோ சொல்லிப் போட்டு... "சரி ஐயா நீங்க போங்கோ.." எண்டார்...

ஏற்கனவே சந்தைப் பிரச்சினை ஒண்டில சந்திச்சவர்.. ஆள் "வசூல்ராஜா" முந்தி இருந்த ஆணையிடுற ஆள் இவரைக் கண்டும் காணாமல் விடடிருந்தவர்...

இப்ப வந்தவர் வந்து கொஞ்ச நாளா வாலைச் சுருட்டிக் கொண்டிருந்தவர்... இப்ப பழைய படி "பப்ளிக்" ஆ யாவாரம் செய்யத் தொடங்கீற்றார்...

அதான் பாருங்கோ... பாகப் பிரிவினை சரியா நடந்தால்... தம்பி செய்யுறதொண்டும் ஆட்சிக் கதிரையில இருக்கிறவயின்ர கண்ணுக்குத் தெரியாது போல...?

ஆர் என்ன செய்தாலும், கண்டும் காணாமல் - மனம் கோணாமல் இருப்பினம் போல? ஆரை நொந்து என்ன தான் ஆகப் போகுது?

- நரமுனி -

# "புத்தாண்டு முதல் பொய் பேசுறத விடுங்க" கெஜ்ரிவாலுக்கு டெல்லியிலிருந்து பறந்த கடிதம்!

புத்தாண்டு முதல் பொய் சொல்ல மாட்டேன் என உறுதி மொழி எடுக்கும்படி அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு டெல்லி பாஜக தலைவர் கடிதம் எழுதி உள்ளார்.

கெஜ்ரிவாலுக்கு பாஜக தலைவர் வீரேந்திர சச்தேவா எழுதியுள்ள கடிதத்தில், புத்தாண்டு வாழ்த்துகள், சிறுவயதில் இருந்தே புத்தாண்டு தினத்தில் கெட்ட பழக்கங்களை விட்டுவிட்டு நல்ல மற்றும் புதிய ஒன்றைத் தொடங்க நாங்கள் அனைவரும் தீர்மானம் செய்கிறோம்.

2025 ஆம் ஆண்டின் முதல் நாளில், நேர்மையற்ற மற்றும் வஞ்சகமான அரசியலை கைவிட்டு, அர்த்தமுள்ள மாற்றத்தை கொண்டுவர கெஜ்ரிவால் பாடுபடுவார் என்று நம்புகிறேன்.

தனது புத்தாண்டு தீர்மானத்தின் ஒரு பகுதியாக, கெஜ்ரிவால் தனது குழந்தைகளின் பெயரில் சத்தியம் செய்யக்கூடாது என்றும், மதுபானத்தை ஊக்குவித்ததற்காகவும் யமுனை நதியை சுத்தம் செய்வதாக தவறான உறுதிமொழிகளை வழங்கியதற்காகவும் மன்னிப்பு கேட்க வேண்டும் சச்தேவா தெரிவித்தார்.

டெல்லியின் பெண்கள், பெரியவர்கள் மற்றும் மத சமூகங்களின் உணர்வுகளுடன் விளையாடும் வகையில், பொய் வாக்குறுதிகளை அளிப்பதை ஆம் ஆத்மி தலைவர் நிறுத்துவார் என்றும், அரசியலுக்காக தேச விரோத சக்திகளின் நன்கொடைகளை திரட்டவோ அல்லது ஏற்கவோ மாட்டார் என்று நம்புகிறேன் என்றும் பாஜக தலைவர் மேலும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் நீதியின் பாதையில் நடக்க கடவுள் உங்களுக்கு பலம் தரட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத்துக்கு அரவிந்த் கெஜ்ரிவால் எழுதியுள்ள கடிதத்தில், பாஜக வெளிப்படையாக பணம் விநியோகம் செய்வதும், தலித் வாக்காளர்களை சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக டெல்லியின் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க முயற்சிப்பதும், பாஜக செய்யும் அனைத்து தவறுகளும் உங்களுக்கு தெரிந்துதான் நடக்கிறதா? என்று கேட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





## சனாதன தர்மம் பற்றி பேசிய பினராயி விஜயன்– பா.ஜ.க. கடும் எதிர்ப்பு!

கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம் வர்க்கலா நகராட்சியில் உள்ள சிவகிரியில் ஸ்ரீ நாராயண குருமடம் உள்ளது. இங்கு ஸ்ரீ நாராயண சங்கத்தின் தலைமையகம் இருக்கிறது. இந்த சங்கத்தில் யாத்திரை மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கேரள மாநில முதல்-மந்திரி பினராயி விஜயன் கலந்து கொண்டு யாத்திரையை தொடங்கிவைத்தார். அந்த விழாவில் அவர் கூறியதாவது சனாதன தர்மம் என்பது சாதி அடிப்படையிலான சமூக அமைப்பே தவிர வேறொன்றும் இல்லை. நாராயண குரு சனாதன தர்மத்தின் பேச்சாளராகவோ அல்லது பயிற்சி செய்பவராகவோ இல்லை. ஆனால் அதை புனரமைத்து புதிய யுகத்திற்கு ஏற்ற தர்மத்தை பிடகடனப்படுத்திய ஒரு துறவி.



நாராயண குரு பரிந்துரைத்த புதிய யுகமான மனித நேய தர்மம் காலத்துடன் நிற்கிறது. சனாதன தர்மத்தின் கட்டமைப்பில் குருவை நிலைநிறுத்த முயற்சிப்பது துறவியை அவமதிக்கும் செயலாகும். வர்ணாஸ்ரம தர்மம் என்பது சனாதன தர்மத்திற்கு ஒத்ததாகவோ அல்லது ஒருங்கிணைந்த பகுதியாகவோ உள்ளது.

நாராயண குருவின் துறவு வாழ்க்கை முழு சாதுர்வர்ண அமைப்பையும் கேள்விக்குறியாக்கியது. சமூக சீர்திருத்தவாதியான ஸ்ரீ நாராயண குருவை வெறும் மதத் தலைவராகவோ அல்லது ஒரு மத துறவியாகவோ குறைத்து மதிப்பிடும் முயற்சிகள் உணரப்பட வேண்டும்.

குருவுக்கு மதமும் இல்லை, ஜாதியும் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். யாரேனும் ஒரு குருவை சாதி அல்லது மதத்தின் எல்லைக்குள் கொண்டுவர முயன்றால், அவரை அதற்கு மேல் அவமதிக்க முடியாது.

இதுபோன்ற முயற்சிகளுக்கு எதிராக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். அப்படி நடக்க விடக்கூடாது. இதுபோன்ற தவறான விளக்கங்களை பொறுத்துக் கொள்ள முடியாது என்று உறுதியாக கூறமுடியும் என இதன்போது அவர் பேசினார்.

இந்நிலையில் முதல்-மந்திரி பினராயி விஜயனின் கருத்துக்கு பா.ஜ.க. தரப்பில் கடுமை எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அவர் தனது கருத்துக்களின் மூலம் சிவகிரியில் உள்ள சனாதன தர்மத்தையும், ஸ்ரீ நாராயணகுருவின் ஆதரவாளர்களையும் அவமதித்து விட்டார் என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

"சிவகிரி மாநாட்டில் பினராயி விஜயன் பேசியது சனாதன தர்மத்தை வெறுக்க வேண்டும் என்பது தான். அவரது கருத்து சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்று உதயநிதி ஸ்டாலின் கூறியதன் தொடர்ச்சியே" என்று பா.ஜ.க. மூத்த தலைவர் முரளீதரன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "பினராயி விஜயனின் ஆட்சியில் கேரளாவில் இந்து சமூகம் மிகப்பெரிய சவாலை எதிர்கொண்டது. நாராயண குருவை சனாதன தர்மத்தின் எதிரியாக சித்தரிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசாரத்தை கேரள மக்கள் நிராகரிப்பார்கள்" என்றும் கூறினார்.

## மணிப்பூர் முதல்வர் மன்னிப்பு கேட்டு வாயை மூடும் முன் குண்டுவீச்சு !





கடந்த ஆண்டு ஜ2024ஸ முழுவதும் மிகவும் துரதிஷ்டவசமானது. கடந்த வருடம் மே 3 முதல் இன்று வரை என்ன நடக்கிறது என்பதற்கு நான் மாநில மக்களிடம் வருந்துகிறேன். பலர் தங்கள் அன்புக்கு உரியவர்களை இழந்துள்ளனர். பலர் வீடுகளை விட்டு வெளியேறினர். நான் உண்மையிலேயே இதற்காக வருத்தப்படுகிறேன். நான் மன்னிப்பு கேட்க விரும்புகிறேன்.

கடந்த 3-4 மாதங்களாக அமைதியை நோக்கி முன்னேறி வருவதைக் கண்டு 2025 புத்தாண்டுடன் மாநிலத்தில் இயல்பு நிலையும் அமைதியும் திரும்பும் என நம்புகிறேன் என்று பாஜக ஆளும் மணிப்பூர் முதல்வர் பைரன் சிங் நேற்று தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த ஆண்டு மே மாதம் தொடங்கிய குக்கி - மெய்தேய் இனக்குழுக்கள் இடையிலான கலவரத்தினால் 250 பேர்வரை உயிரிழந்தனர். இன்னும் கலவரம் ஓயாத சூழலில் கடந்த அக்டோபர் முதல் ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்களால் பள்ளத்தாக்கில் பதற்றமான சூழலே நிலவி வருகிறது.

இந்நிலையில் நடந்தவற்றுக்குப் பொறுப்பேற்கும் முகாந்திரமாக பாஜகவின் பைரன் சிங் மன்னிப்பு கேட்டு வாயை மூடும் முன் இன்று மீண்டும் கிளர்ச்சியாளர்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தி உள்ளனர்.

மணிப்பூர் தலைநகர் இம்பால் மேற்கு மாவட்டத்தின் கடங்பண்ட் பகுதியில் இன்று ஜபுதன்கிழமைஸ அதிகாலையில் கிளர்ச்சியாளர்கள் என சந்தேகிக்கும் நபர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காங்போக்பி மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகளில் உள்ள கிளர்ச்சியாளர்கள், இம்பால் மேற்கு மாவட்டத்தில் உள்ள தாழ்வான கடங்பண்ட் பகுதியில் உள்ள கிராமத்தின் மீது அதிகாலை 1 மணியளவில் அதிநவீன ஆயுதங்களால் பல தடவைகள் துப்பாக்கிச்சூடு நடத்தியும் குண்டுகளை வீசியும் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த கூடுதல் பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து கிராமத்தினருடன் சேர்ந்து தீயை அணைத்தனர். இந்த தாக்குதலில் பெரிய அளவிலான சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலுக்கு பிறகு கிராம மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். 2023 மே மாதம் மாநிலத்தில் வன்முறை வெடித்ததில் இருந்து கடங்பண்ட் பகுதி கிளர்ச்சியாளர்களால் அதிக தாக்குதலை சந்தித்துள்ளது.

## திருப்பதி கோவிலில் குறைந்தது பக்தர்கள் கூட்டம்!

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு பக்தர்கள் கூட்டம் குறைந்தது. நேற்று இரவு தரிசனத்திற்காக காத்திருந்த பக்தர்கள் இரவு 12 மணிக்கு புத்தாண்டு பிறந்ததையொட்டி புத்தாண்டை வரவேற்கும் விதமாக பக்தி பரவசத்துடன் கோவிந்தா கோவிந்தா என கோஷங்களை எழுப்பினர்.

பக்தர்கள் கூட்டம் குறைந்ததால் நேரடியாக பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். ஒரு மணி நேரத்தில் பக்தர்கள் ஏழுமலையானை தரிசனம் செய்ததால் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருப்பதியில் நேற்று மட்டும் 62,495 பேர் தரிசனம் செய்தனர். 19,298 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.3.80 கோடி உண்டியல் காணிக்கை வசூலானமையும் குறிப்பிடத்தக்கது.





# புத்தாண்டில் பூமிக்கு வரும் ஜென் பீட்டா!

**2025** ஜனவரி முதலாம் திகதி முதல் பிறக்கும் தலைமுறைக்கு ஜென் பீட்டா (புநெ டீநவய) என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பிறந்தவர்களை எந்த தலைமுறையைச் சார்ந்தவர்கள் என்று முத்திரை குத்தி வகைப்படுத்தும் சமூக ஆராய்ச்சியாளர் மார்க் மெக்ரிண்டில் 2025 முதல் 2039 வரை பிறக்க உள்ளவர்களுக்கு ஜென் பீட்டா என்ற தலைமுறை லேபிளை வரையறுத்துள்ளார்.

2035 ஆம் ஆண்டில் உலகின் மொத்த மக்கள் தொகையில் 16 சதவீதமாக இருக்கப்போகும் இந்த ஜென் பீட்டாவின் பெரும்பாலானவர்கள் 22 ஆம் நூற்றாண்டைக் காண இருப்பதாக மார்க் மெக்ரிண்டில் கூறியுள்ளார்.

ஒரு குறிப்பிட்ட கால இடை வெளியில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக ளுக்கும் ஒவ்வொரு தலை முறைக்கும் புதிய பெயர் வைக்கப்படும்.

முதல் கல கட்டம்- 1928-1945
இரண்டாம் கால கட்டம்: 1946-1964
மூன்றாம் கால கட்டம்: 1965-1980
நான்காம் கால கட்டம்-: 1981-1996
ஐந்தாம் கால கட்டம்: 1997-2009
6 ஆம் கால கட்டம்-: 2010-2024

அடுத்து வரும் கால கட்டம்-: 2025- 2039 வரை. இப்போது இருக்கும் கால கட்டம் 6 ஆவது காலகட்டம் ஆகும் . அது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியோடு முடிந்து விட்டது . இன்றில் இருந்து அடுத்த காலகட்டம் உருவாகிறது. இதற்கெல்லாம் தனி தனியாகப் பெயர் உள்ளது. உதாரணமாக 2010-2024 வரை ஜென் ஆல்பா, 2025-2039 வரை ஜென் பீட்டா. அதாவது இப்போது இருப்பது ஜென் ஆல்பா. இவர்கள் 2010 இல் பிறந்த குழந்தைகள். 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை பிறக்கும் குழந்தைகள் இந்த வகைக்குள் சேர்க்கப்படுவார்கள்.

90ஸ் கிட்ஸ் என்று அழைக்கப்படுபவர்கள் இரண்டு வகைக்குள் வருவார்கள். அதாவது மில்லினியல்கள். 1981-1996 மற்றும் ஜென் ணு: 1997-2009. இவர்கள் இருவரும் 1990க்கு பின் பிறந்தவர்கள்.

அடுத்து வரும் கால கட்டம்-: 2025- 2039 வரை ஆகும் .நேற்று வரை இருந்த கால கட்டம் 6 ஆவது காலகட்டம். இதற்கெல்லாம் தனி தனியாக பெயர் உள்ளது.

சைலன்ட் ஜெனரேஷன்: 1928-1945
பேபி பூமர்ஸ்: 1946-1964
ஜென் ஓ : 1965-1980
மில்லினியல்கள்: 1981-1996
ஜென் ணு: 1997-2009
ஜென் ஆல்பா: 2010-2024
ஜென் பீட்டா: 2025-2039 வரை
அதாவது இப்போது இருப்பது (2024) ஜென் ஆல்பா.



இவர்கள் 2010 இல் பிறந்த குழந்தைகள்.

90ஸ் கிட்ஸ் என்று அழைக்கப்படுபவர்கள் இரண்டு வகைக்குள்ளும் வருவார்கள். அதாவது மில்லினியல்கள்: 1981-1996 மற்றும் ஜென் ணு: 1997-2009. இவர்கள் இருவரும் 1990க்கு பின் பிறந்தவர்கள்.

இப்போது இளைஞர்களாக இருக்கும் பலர் ஜென் ண அல்லது ஜென் ஆல்பா தலைமுறையை சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களின் காலம் எல்லாம் இதோடு முடிகிறது. இனி ஜென் பீட்டா. 2025 ஆம் ஆண்டில்.. அதாவது இன்று முதல் பிறக்கும் குழந்தைகள் “ஜென் பீட்டா” தலைமுறையைச் சேர்வார்கள் .

2025 மற்றும் 2039 க்கு இடையில் பிறந்த குழந்தைகளை உள்ளடக்கிய குழு.. அதாவது ஜென் பீட்டா குழு 2035 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 16 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பலர் 22 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தை காண வாய்ப்புள்ளது. அதாவது 2100 ஆம் ஆண்டைக் காண வாய்ப்புகள் உள்ளன. அடுத்த நூற்றாண்டைக் காண வாய்ப்புள்ள தலைமுறையாக.. பெரும்பாலும் ஒரே தலைமுறையாக இவர்கள் இருக்க வாய்ப்புகள் உள்ளன.

‘பீட்டா குழந்தைகள்’ சகாப்தத்தில், தங்கள் அன்றாட வாழ்வில் இதுவரை மற்ற எந்த தலைமுறையினரும் கண்டிராத நவீன தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு உதவியுடன் வளர்வார்கள். “தானியங்கி போக்குவரத்தின் அதிகளவிலான வளர்ச்சி, உடலில் அணியக்கூடிய ஆரோக்கிய மற்றும் சுகாதார தொழில்நுட்பங்கள் மற்றும் அதிவேகமான மெய்நிகர் சூழல்கள் ஆகியவற்றை தினசரி வாழ்க்கையின் நிலையான அம்சங்களாக” அனுபவிக்கும் முதல் தலைமுறையாக அவர்கள் இருப்பார்கள்.

இவர்கள் ஜென் பீட்டா என்று மட்டும் அழைக்கப்படாமல் .. ‘பீட்டா பேபி’ என்று அழைக்கப்படுவார்கள். பெரும்பாலும் இவர்கள் ஏஐ யுகத்தில் வாழ்வார்கள். ஏஐ பயன்படுத்துவதில் வல்லவர்களாக இருப்பார்கள்.. இப்போது இருக்கும் பெரும்பாலான தொழில்நுட்பம் இவர்கள் பதின்பருவத்தில் இருக்கும் காலத்தில் மறைந்து போக வாய்ப்புகள் உள்ளன. இவர்கள் காலத்தில் பல புதிய தொழில்நுட்பங்கள் இருக்கும். பெரும்பாலும் எல்லாமும் ஏஐ மயமாக மாறி இருக்கும்.

தொழில்நுட்பம் அவர்களின் விரல் நுனியில் இருக்கும் அதே வேளையில், காலநிலை மாற்றம், நகரமயமாக்கல் மற்றும் உலகளாவிய மக்கள்தொகை இயக்கவியலில் மாற்றங்கள் போன்ற பல குறிப்பிடத்தக்க சவால்களைக் கொண்ட ஒரு சமூக நிலப்பரப்பை ஜென் பீட்டா மரபுரிமையாகப் பெறுவார்கள் என்று மெக்ரிண்டில் தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

எதிர்காலத்தை அவர்கள் எவ்வாறு வடிவமைக்கப் போகிறார்கள் என்பதும் அவர்களின் தேவைகள், மதிப்புகள் மற்றும் விருப்பங்களைப் புரிந்துகொள்வதும் மிகவும் முக்கியமானதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த நவீன உலகில் சமூக ஊடக தளங்களின் வளர்ச்சி காரணமாக சமூக அமைப்பாக செயல்படுவது அரிதான விஷயமாக மாறியுள்ள சூழலில், மனித சமூகத்தை உண்மையான அர்த்தத்தில் ஒன்றிணைத்து செயல்பட வேண்டிய வழிகளை ஜென் பீட்டா கண்டறிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் போன் பயன்படுத்தும் முறை பெரும்பாலும் மாறும்.. விர்ச்சுவல் ரியாலிட்டி தொழில்நுட்பம் இவர்கள் காலத்தில் அதிகம் இருக்கும் என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இப்போது 90ஸ் கிட்ஸ்களாக இருக்கும் பலர் அடுத்த 15- 20 வருடங்களில் பீட்டா பேபிகளிடம் தங்கள் வேலைகளை இழக்க நேரிடும் என்று ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐக்கிய அரபு எமிரேட்சில் விமான விபத்து: இந்திய மருத்துவர் உட்பட 2 பேர் பலி!





ஐக்கிய அரபு அமீரகத்தில் பிறந்து வளர்ந்தவர் இந்திய வம்சாவளியை சேர்ந்த சுலைமான் அல் மஜித் (வயது 26). இவர் இங்கிலாந்தில் உள்ள கவுண்டி டர்ஹாம் மற்றும் டார்லிங்டன் என்ஹெச்எஸ் அறக்கட்டளையில் வைத்தியராக பணிபுரிந்து வந்தார்.

இந்த நிலையில் புத்தாண்டை முன்னிட்டு ஐக்கிய அரபு எமிரேட்சில் சுலைமான் தனது குடும்பத்துடன் விமானத்தில் பறக்க திட்டமிட்டார். இதற்காக சிறிய ரக விமானத்தை வாடகைக்கு எடுத்தார்.

குடும்பத்தினரை அழைத்துச் செல்வதற்கு முன்னதாக தான் மட்டும் ஒருமுறை விமானத்தில் செல்ல சுலைமான் முடிவு செய்த நிலையில்

விமானத்தை பாகிஸ்தானை சேர்ந்த 26 வயது பெண் ஒருவர் ஓட்டினார். இதில் சுலைமான் இணை விமானியாக இருந்தார். விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விபத்தில் சிக்கியது. விமானம் கீழே விழுந்து நொறுங்கியதில் 2 பேரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்தில் இந்திய வம்சாவளியினர் 30 பேருக்கு கௌரவ விருது!



*இங்கிலாந்தில் ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டு, சுகாதாரம், கல்வித்துறை மற்றும் தன்னார்வ சேவை ஆகியவற்றில் முன்மாதிரியாக இருப்பவர்களுக்கு கௌரவ விருது வழங்கப்படுகிறது.*

*அந்த வகையில் 2025-ம் ஆண்டுக்கான கவுரவ விருதை பெறுபவர்களின் பட்டியலை இங்கிலாந்து மந்திரிசபை வெளியிட்டுள்ளது.*

*பல்வேறு துறைகளை சேர்ந்த 1,200-க்கும் மேற்பட்டோருக்கு விருது வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்திய வம்சாவளியினர் 30 பேருக்கு இந்த கௌரவ விருது வழங்கப்பட உள்ளது. பட்டியலில் இடம்பெற்றவர்களுக்கு மன்னர் சார்லஸ் விருது வழங்கி கௌரவிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## விண்வெளியில் 16 முறை புத்தாண்டு கொண்டாடும் சுனிதா வில்லியம்ஸ்!





அமெரிக்க விண்வெளி வீராங்கனையான இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ளார். கடந்த ஜுன் 5-ந் திகதி விண்வெளிக்கு சென்ற அவர், விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பூமிக்கு திரும்ப முடியாமல் சிக்கி உள்ளார். அவர் வருகிற மார்ச் மாதம் பூமிக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள சுனிதா வில்லியம்ஸ் உள்பட குழுவினர் 16 முறை புத்தாண்டு கொண்டாடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சர்வதேச விண்வெளி மையம் கூறும்போது, பூமிக்கு மேல் 400 கி.மீ உயரத்தில் மிதந்து கொண்டிருக்கும் எக்ஸ்பெடிஷன் 72 குழுவினர், பூமியைச் சுற்றி வரும்போது 2025 பிறக்கும் தருணத்தில் 16 சூரிய உதயங்களையும் அஸ்தமனங்களையும் காண்பார்கள் என்று தெரிவித்துள்ளது.

# நடுவானில் சென்ற போது திடீர் புகை.. அவசரமாக தரையிறங்கிய விமானம்!

ஹவாய் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்றின் காக்பிட்-இல் புகை வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. சியாட்டில் விமான நிலையத்தில் இருந்து ஹானோலுலு நோக்கி புறப்பட்ட விமானத்தின் காக்பிட்-இல் திடீரென புகை வந்தது. இதையடுத்து விமானம் மீண்டும் சியாட்டில் விமான நிலையத்திற்கே திருப்பிவிடப்பட்டது.

திங்கள்கிழமை மதியம் 1 மணி அளவில் சியாட்டில் விமான நிலையத்தில் இருந்து 273 பயணிகள் மற்றும் பத்து பணியாளர்களுடன் ஹவாய் ஏர்லைன்ஸ்-க்கு சொந்தமான ஏர்பஸ் ஏ330 புறப்பட்டது. சியாட்டிலில் இருந்து ஹானோலுலு புறப்பட்ட விமானத்தில் திடீரென புகை வந்ததை பணியாளர்கள் கண்டறிந்து தெரிவித்தனர்.

இதையடுத்து விமானத்தில் அவசர நிலை ஏற்பட்டதாக விமானி அறிவித்தார். இதையடுத்து, விமானம் சியாட்டில் விமான நிலையத்திலேயே பத்திரமாக தரையிறக்கப்பட்டது. விமானம் தரையிறங்கும் முன்பே விமான நிலையத்தில் தீயணைப்பு துறையினர் மற்றும் மருத்துவ பணியாளர்கள் தயார் நிலையில் இருந்தனர்.

விமானம் பத்திரமாக தரையிறங்கியதும், தீயணைப்புத் துறையினர் விமானத்தில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, புகை வந்ததற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்பதை கண்டறிந்தனர். இதனை விமான நிலைய செய்தி தொடர்பாளர் உறுதிப்படுத்தினார்.



## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறவில்லை என்பதே உண்மை. நான் சுமார் 20 ஆயிரம் வாக்குகளை எடுத்தேன். சில மாவட்டங்களில் 5 ஆயிரம் வாக்குகளைப் பெற்றவர்கள் நாடாளுமன்றம் சென்றனர். இதுதான் இந்தத் தேர்தலை முறைமை.

அதேவேளை, சிஸ்டம் சேன்ஸ் என்பதை அரசு மலையகத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்." - என்றார்.

## புலிகளால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்கட்டப் போரின்போது இராணுவத் தளபதியாகச் செயற்பட்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, மஹிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்றும் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் பொன்சேகா மேலும் கூறியதாவது:-

"போர் இடம்பெறும் காலப்பகுதியிலகூட மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கவில்லை. அவரைக் கொலை செய்வதற்கு பயங்கரவாதிகள் முற்படவில்லை. மஹிந்த தனித்துச் சென்றா போர் செய்தார்? இராணுவத் தளபதி என்ற அடிப்படையில் நாம் கட்டளை பிறப்பிக்கவில்லையா?

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு எனக்கான பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டது. என்னைச் சிறையில் அடைத்தனர். அங்கு புலிகளும் இருந்தனர். அப்போது எமக்கு அச்சுறுத்தல் இருக்கவில்லையா?

மஹிந்த ராஜபக்ஷ மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தமாட்டார்கள். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது பிரபாகரனுடன் பேச்சு நடத்துவது பற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மஹிந்த குறிப்பிட்டிருந்தார். போரை அனுமதிக்கவில்லை எனவும் அவர் கூறியிருந்தார். எனவே, மஹிந்தவுடன் புலிகளுக்கு எவ்வித வைராக்கியமும் இல்லை.

நாம் வேண்டாம் எனக் கூறியும், போர் முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அதாவது 2009 ஜனவரி 31, பெப்ரவரி 1 மஹிந்த போர் நிறுத்தத்தை வழங்கினார். இந்த போர் நிறுத்தத்தை வழங்காவிடின் மூன்று மாதங்களுக்கு முன்னரே போர் முடிந்திருக்கும்.

இந்தப் போர் நிறுத்தக் காலப் பகுதியில் தீவிரவாதிகளின் தாக்குதலால் 5 கிலோமீற்றர் வரை பின்நோக்கி வரவேண்டிய நிலை எமது இராணுவத்துக்கு ஏற்பட்டது. பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பிச் செல்வதற்காகவே அந்தப் போர் நிறுத்தம் வழங்கப்பட்டிருந்தது. எனவே, மஹிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்தமாட்டார்கள்.

மிக் விமானத்தைவிடவும் ட்ரோன் விமானங்கள் விலை அதிகம். அவ்வளவு அதிக பணத்தைச் செலவளித்து மஹிந்த மீது யார் தாக்குதல் நடத்துவது?" - என்றார் பொன்சேகா.

## குற்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர். கொழும்பு பேராயர் கர்தினால் கர்தினால் ரஞ்சித்தை அவதூறு செய்யும் வகையில் சமூக ஊடகங்களில் ஒலிப் பதிவு பரப்பப்பட்டமை தொடர்பில் நாமல் குமார கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கொழும்பு பேராயர் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"இந்த நாட்டில் அதிக பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தலைவர்தான் மஹிந்த ராஜபக்ஷ. அவருக்குத் தேவையான பாதுகாப்பை வழங்காமல், அவரை வீட்டுக்குள்ளேயே முடக்கி, அரசியலில் இருந்து ஓய்வுபெற வைப்பதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. மஹிந்தவைக் கண்டு தற்போதைய அரசு அஞ்சுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு போதாது என அவரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர். இந்நிலையிலும் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. நாட்டை மீட்ட தலைவரை நாம் நிச்சயம் பாதுகாப்போம்.

புலிகளை ஒழித்த தலைவருக்கும், புலிகளுடன் பேச்சு நடத்தியவர்களுக்கும் ஒரே அளவான பாதுகாப்பை வழங்குவது நியாயமா?" என்றார்.

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் விசேட கூட்டமும் நடத்தப்படும். கட்சி மறுசீரமைப்புப் பணியும் ஆரம்பமாகும். சில பதவிகளில் மாற்றம் வரும். அது மக்கள் எதிர்பார்க்கும் மாற்றமாக இருக்கும்.

கட்சித் தலைமைப் பதவியில் மாற்றம் வராது. ஆனால், தனக்குள்ள பலவீனங்களை இனங்கண்டு அவற்றைச் சரி செய்வதற்குரிய நடவடிக்கையில் கட்சித் தலைவர் ஈடுபட வேண்டும். மக்கள் அதனையே எதிர்பார்க்கின்றனர்.

அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைப்பு தொடர்பிலும் அதானம் செலுத்தப்பட்டுள்ளது." - என்றார்.

## டிப்பர் கவிழ்ந்ததில் சாரதி உயிரிழப்பு

*கற்களை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி உயிரிழந்துள்ளார் என்று பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*காலி, ஹியாரே பகுதியைச் சேர்ந்த எம்.எச்.சுஜீவ என்ற 53 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே விபத்தில் உயிரிழந்துள்ளார்.*

*உயிரிழந்த சாரதி நேற்று தாம் ஓட்டி வந்த டிப்பரை கல் ஆலைக்கு கொண்டு வந்து சிறிது நேரத்தில் கல் ஏற்றி முடித்து வாகனத்தைப் பின்புறமாக ஓட்டிச் சென்றபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.*

*கல் ஆலை ஊழியர்கள் காயமடைந்த நபரை ஹொரண ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.*

## கொடூரமாக கொலை செய்த கணவன்

குருணாகல், குளியாப்பிட்டி பிரதேசத்தில் பெண் ஒவர் கணவரால் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

பரகஹருப்ப பிரதேசத்தில் பெண்ணொருவர் நேற்று மண்வெட்டியால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்ப தகராறு காரணமாக கணவரின் தாக்குதலால் 37 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொலையின் பின்னர், சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீதிபதிகளுக்கு அதிரடி இடமாற்றம்

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீதவான்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி கொழும்பு பிரதான நீதிவானாகக் கடமையாற்றிய திலின கமகே மொரட்டுவை மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டை நீதிவானாகக் கடமையாற்றிய தனுஜா லக்மாலி கொழும்பு பிரதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டை நீதிவானாக நிலுபுலி லங்காபுரவும், மொரட்டுவை மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய சத்துரிக்கா டி சில்வா கல்கிஸை நீதிபதியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது

# விஷம் கலந்த பானத்தை குடித்த இளைஞர் மரணம்

புத்தாண்டைக் கொண்டாடும் விருந்தில் கலந்துகொண்ட இரண்டு இளைஞர்கள் அருந்திய பானத்தால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர்.

கஹதுடுவ பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர் பலருடன் நேற்று நள்ளிரவு புத்தாண்டின் விடியலைக் கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில், பொல்கசோவிட்ட ஹல்பிட்ட பகுதியிலுள்ள வீடொன்றுக்குச் சென்று நண்பர்கள் சிலரின் அழைப்பின் பேரில் விருந்தொன்றில் கலந்துகொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு இளைஞர்களுக்கு அவர்கள் பயன்படுத்திய சில பானத்தால் ஒவ்வாமை ஏற்பட்டது எனவும், அவர்களது நண்பர்களால் சிகிச்சைக்காக வத்தரா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், இளைஞர் ஒருவர் இன்று உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வலைத்தளங்களை முடக்கிய ஹேக்கர் குழு கண்டுபிடிப்பு



இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் சமூக வலைத்தளங்களை முடக்கிய ஹேக்கர் குழு இனம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட புத்திக மனதுங்க இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் சமூக வலைத்தளங்களை முடக்கிய ஹேக்கர் குழு தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இதற்கு முன்னர் அமெரிக்க ராஜாங்க பாதுகாப்புத் திணைக்களத்தின் இணையத்தளம் மற்றும் இந்தியாவின் அரசாங்க இணையத்தளம் ஒன்றையும் முடக்கியிருந்தனர்.

ஊடுருவிய ஹேக்கர்கள் மேற்கொண்ட மாற்றங்கள் மற்றும் ஊடுருவப்பட்ட தகவல்களை அழித்து புதிதாக நிறுவும் மென்பொருளை தற்போது நிறுவியுள்ளோம்.

இன்னும் ஓரிரு நாட்களுக்குள் பொலிஸ் திணைக்கள சமூக வலைத்தளங்கள் மீண்டும் பயன்பாட்டுக்கு வந்து விடும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தின் பேருந்து – முச்சக்கரவண்டி மோதி விபத்து: ஒருவர் படுகாயம்



*வவுனியா, ஏ9 வீதியில் இராணுவத்தின் பேருந்து மற்றும் முச்சக்கர வண்டியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.*

*குறித்த விபத்தானது, நேற்று இடம்பெற்றுள்ளது.*

*இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,*

*வவுனியா, ஏ9 வீதி ஊடாக அநுராதபுரம் நோக்கி பயணித்த இராணுவத்தினரின் பேருந்து ஒன்று மூன்றுமுறிப்பு பகுதியில் பயணித்த தனியார் பேருந்து ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர் திசையில் வவுனியா நோக்கி வந்த முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.*

*குறித்த விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிசார் மேற கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டிருக்கது.*


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குழநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!